සියලු ම හිමිකම් ඇවිරිණි]
முழுப் பதிப்புரிமையுடையது]
All Rights Reserved]

ශ්‍රී ලංකා විභාග දෙපාර්තමේන්තුව / இலங்கைப் பரீட்சைத் திணைக்களம் / Department of Examinations, Sri Lanka

**இலங்கை வெளிநாட்டு சேவையிலுள்ள உத்தியோகத்தர்களுக்கான 1 ஆவது மற்றும் 2 ஆவது வினைத்திறன்காண் தடைதாண்டல் பரீட்சை மற்றும் இரண்டாம் மொழிப் பரீட்சை - 2017 (2018)**

1st and 2nd Efficiency Bar Examination and Second Language Test for the Officers of the Sri Lanka Foreign Service – 2017(2018)

**(01)** நிதியியல்
Finance

மூன்று மணித்தியாலங்கள்
Three hours

**ஐந்து** வினாக்களுக்கு மட்டும் விடை எழுதுக.

**1.** (i) ஒதுக்கீட்டிற்கும் கட்டுநிதிக்கும் இடையிலான வேறுபாட்டினை சுருக்கமாக விளக்குக. *(08 புள்ளிகள்)*

(ii) அரச நிதிப்பிரமாணத்தின்படி கணக்கீட்டு அலுவலர் ஒருவரினால் வழங்கக் கூடிய உப கட்டுநிதி வகைகள் எவை என விளக்குக. *(12 புள்ளிகள்)*

**2.** (i) அரசாங்க நிதி ஒழுங்குவிதிகள் 154 இன்படி கணக்காய்வாளர் நாயகத்தின் கடமைகளும் பணிகளும் யாவை எனச் சுருக்கமாக விளக்குக. *(10 புள்ளிகள்)*

(ii) "கணக்குப் பரிசோதனையில் ஏற்றுக்கொள்ளப்படாத கணக்குகள்" தொடர்பாக அரச நிதி ஒழுங்கு விதிகள் 117 இல் உள்ள ஒழுங்கு விதிகள் யாவை என ஆராய்க. *(10 புள்ளிகள்)*

**3.** அரசாங்க நிதி ஒழுங்குவிதிகள் 135 இன்படி,

(i) செலவினம்

(ii) வருமானம்

தொடர்பான செயற்பாடுகள் ஒவ்வொன்றிலும் கையளிக்கக்கூடிய கடமைகளை ஒவ்வொன்றாகப் பெயரிடுவதுடன் அந்த செயற்பாடுகள் ஒவ்வொன்றினைப் பற்றியும் ஆராய்க. *(20 புள்ளிகள்)*

**4.** (i) பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் பொறுப்புக்கள் எவை எனச் சுருக்கமாக விளக்குக. *(10 புள்ளிகள்)*

(ii) அரசாங்க வருமானங்கள் தொடர்பில் கணக்கீட்டு உத்தியோகத்தரின் கடமைகளும் பொறுப்புகளும் யாவை எனச் சுருக்கமாக விளக்குக. *(10 புள்ளிகள்)*

**5.** அரசாங்க கொள்ளல் வழிகாட்டியின்படி கொள்ளல் குழு மற்றும் தொழில்நுட்ப மதிப்பீட்டு குழு ஒன்றின் பொறுப்புக்களையும் கடமைகளையும் வெவ்வேறாக விளக்குக. *(20 புள்ளிகள்)*

**6.** (i) "வகைமாற்று" நடைமுறை" என்றால் என்ன? *(08 புள்ளிகள்)*

(ii) வகைமாற்று நடைமுறைகளை **பின்பற்றக்கூடாத** சந்தர்ப்பங்கள் எவை? *(12 புள்ளிகள்)*

**7.** (i) நட்டம் / விபத்து ஒன்று தொடர்பான விசாரணையின் போது தயாரிக்கப்படும் முழுமையான அறிக்கையில் உள்ளடக்கப்படும் விடயங்கள் எவை? *(12 புள்ளிகள்)*

(ii) நி.பி. 108 இன்படி, நட்டங்களை கையாள்வதற்கு அதிகாரமளிக்கப்பட்ட அதிகாரிகளையும் அவர்களின் நிதி எல்லைகளையும் குறிப்பிடுக. *(08 புள்ளிகள்)*

**8.** சிறுகுறிப்புகள் எழுதுக.

(i) வருடாந்த களஞ்சிய ஒப்பாய்வு

(ii) திறந்த காசோலைகள்

(iii) எதிர்பாராத பின்னிகழ்ச்சி செலவு நிதியம்

(iv) அரச அலுவலர்களின் முற்பணக் கணக்கு

(v) அரசாங்க வருமானக் கணக்கு *(04 × 5 = 20 புள்ளிகள்)*

***

සියලු ම හිමිකම් ඇවිරිණි]
முழுப் பதிப்புரிமையுடையது]
All Rights Reserved]

ශ්‍රී ලංකා විභාග දෙපාර්තමේන්තුව / இலங்கைப் பரீட்சைத் திணைக்களம் / Department of Examinations, Sri Lanka

**இலங்கை வெளிநாட்டு சேவையிலுள்ள உத்தியோகத்தர்களுக்கான 1 ஆவது மற்றும் 2 ஆவது வினைத்திறன்காண் தடைதாண்டல் பரீட்சை மற்றும் இரண்டாம் மொழிப் பரீட்சை - 2017 (2018)**

1st and 2nd Efficiency Bar Examination and Second Language Test for the Officers of the Sri Lanka Foreign Service – 2017(2018)

**(02) இலங்கையின் வரலாறும் புவியியலும்**
History and Geography of Sri Lanka

மூன்று மணித்தியாலங்கள்
Three hours

ஒவ்வொரு பகுதியிலிருந்தும் குறைந்தது **இரண்டு** வினாக்களையேனும் தெரிவு செய்து மட்டும் **ஐந்து** வினாக்களுக்கு விடை எழுதுக.

## பகுதி I

**1.** புராதன காலந்தொட்டு இலங்கையின் வரலாற்றை உருவாக்குவதில் புவியியல் காரணிகள் செல்வாக்குச் செலுத்திய முறையினை உதாரணங்கள் காட்டி விளக்குக. *(20 புள்ளிகள்)*

**2.** இலங்கையின் வரலாற்றில் வலகம்பா மன்னனின் ஆட்சிக் காலம் முக்கியத்துவம் பெறுவதற்கான காரணங்களை பின்வரும் விடயங்களின் அடிப்படையில் கலந்துரையாடுக.

(i) அரசியல்

(ii) கலாசாரம்

*(20 புள்ளிகள்)*

**3.** இலங்கை அணிசேரா வெளிநாட்டுக் கொள்கையை பின்பற்றிய போதும் அதனை யதார்த்தபூர்வமாகச் செயற்படுத்துவதில் எதிர்நோக்கும் சவால்களை ஆராய்க. *(20 புள்ளிகள்)*

**4.** (i) 2017 ஆம் ஆண்டிலிருந்து நடைமுறைக்கு வரும் வகையில் அரசினால் அறிமுகப்படுத்தப்பட்டுள்ள "13 வருடங்கள் தொடர்ச்சியான கல்வி நிகழ்ச்சி" திட்டத்தின் அடிப்படை நோக்கங்களைச் சுருக்கமாக விளக்குக.

(ii) அந்த நிகழ்ச்சித் திட்டத்தை நடைமுறைப்படுத்துவதன் முக்கியத்துவம் மற்றும் அச்செயன்முறையில் எதிர்கொள்ள நேரிடும் பிரச்சினைகள் என்பனவற்றை மதிப்பீடு செய்க. *(20 புள்ளிகள்)*

## பகுதி II

**5.** தீவினைச் சுற்றி அமைந்துள்ள துறைமுகங்கள் புராதன காலந்தொட்டு நவீன காலம் வரை இலங்கையின் அரசியல், பொருளாதார நடவடிக்கைகளில் தாக்கம் செலுத்திய முறையினை உதாரணங்கள் காட்டி விளக்குக.

*(20 புள்ளிகள்)*

**6.** இலங்கையில் இடம்பெறும் இயற்கை அனர்த்தங்களிடையே மண்சரிவு பெருமளவில் இடம்பெறும் போக்கு அண்மைக்காலங்களில் காணக்கூடியதாக உள்ளது.

(i) மண்சரிவு ஏற்படுவதில் தாக்கம் செலுத்தும் இயற்கைக் காரணிகள் மற்றும் மானிடக் காரணிகள் பற்றி விவரிக்குக.

(ii) மண்சரிவு காரணமாக ஏற்படும் அனர்த்தங்களைக் குறைப்பதற்காக எடுக்கப்பட வேண்டிய நடவடிக்கைகளை விளக்குக. *(20 புள்ளிகள்)*

[பக். 2 ஐப் பார்க்க

**7.** (i) "இலங்கை, சிறு நிலப் பரப்பினுள்ளே பெருமளவு செயற்பாடுகள் அடங்கிய பல்வேறு வகையான விடுமுறை வாய்ப்புகளை வழங்கும் சுற்றுலா மையமாக விளங்குகின்றது."
உதாரணங்கள் காட்டி இதனை நிரூபிக்குக.

(ii) சுற்றுலாக் கைத்தொழில் தேசிய பொருளாதாரத்தின் பிரதான பிரிவாக மாறுவதற்கு எதிர்காலத்தில் அதிக கவனம் செலுத்த வேண்டிய முக்கிய துறைகள் பற்றி பரிசீலனை செய்க.

*(20 புள்ளிகள்)*

**8.** பின்வரும் தலைப்புகளுள் **ஒன்றினைத்** தெரிவு செய்து ஆய்வு ரீதியில் விவரிக்குக.

(i) இலங்கையில் வலு உற்பத்திக்காக சூரியசக்தி, காற்றின் சக்தி என்பனவற்றைப் பயன்படுத்துதல்

(ii) இலங்கையின் கடலோர வலயங்களும் (maritime zones) அவற்றின் பொருளாதார முக்கியத்துவமும்

(iii) இலங்கையின் காட்டு வளங்கள், வனசீவராசிகள் வளம் என்பவற்றைப் பாதுகாப்பதன் முக்கியத்துவமும் பாதுகாப்பு உத்திகளும்

*(20 புள்ளிகள்)*

* * *

සියලු ම හිමිකම් ඇවිරිණි]
முழுப் பதிப்புரிமையுடையது]
*All Rights Reserved]*

ශ්‍රී ලංකා විභාග දෙපාර්තමේන්තුව / இலங்கைப் பரீட்சைத் திணைக்களம் / Department of Examinations, Sri Lanka

**இலங்கை வெளிநாட்டு சேவையிலுள்ள உத்தியோகத்தர்களுக்கான 1 ஆவது மற்றும் 2 ஆவது வினைத்திறன்காண் தடைதாண்டல் பரீட்சை மற்றும் இரண்டாம் மொழிப் பரீட்சை - 2017 (2018)**

1st and 2nd Efficiency Bar Examination and Second Language Test for the Officers of the Sri Lanka Foreign Service – 2017(2018)

**(03)** அடிப்படை அரசியலமைப்புச் சட்டமும் சர்வதேச சட்டமும்

Elementary Constitutional Law and International Law

மூன்று மணித்தியாலங்கள்
Three hours

ஒவ்வொரு பகுதியிலிருந்தும் மூன்று வினாக்கள் வீதம் தெரிந்து மொத்தமாக ஆறு வினாக்களுக்கு மட்டும் விடையளிக்குக.

## பகுதி I

**1.** "நீதித்துறையின் சுயாதீனம் என்பதன் கருத்து, பொது மக்களின் பார்வையில், இந்நிறுவனத்தின் நம்பகத்தன்மையின் அளவு ஆகும். இச்சுயாதீனமானது, நாட்டின் சனநாயகத்தினது குறைபாட்டை இலகுவாக இனங்காணக்கூடிய பிரபல்யமான அளவுகோலாகும்."

இலங்கையின் 1978 ஆம் ஆண்டின் அரசியலமைப்பின் கீழ் காணப்படுகின்ற நீதித் துறையின் சுயாதீனம் பற்றிய சூழமைவில் மேற்கூறிய கூற்றினைக் கலந்துரையாடுக.

**2.** "இலங்கைக் குடியரசில் இறைமையானது மக்களிடமுள்ளது. இறைமையானது பராதீனப்படுத்த முடியாததும் ஆகும். அவ் இறைமையானது அரசாங்கத்தின் அதிகாரங்கள், அடிப்படை உரிமைகள் மற்றும் வாக்குரிமை ஆகியவற்றை உள்ளடக்குகிறது."

மேலே உள்ள கூற்றில் கூறப்பட்டுள்ளபடி பொதுமக்களது இறைமையானது, இலங்கை அரசியலமைப்புக் கட்டமைப்பினுள் எவ்வாறு செயற்படுகிறதென்பதைக் கலந்துரையாடுக.

**3.** பின்வரும் அரசியலமைப்பு சட்டங்களில் காணப்படும் பிரதான இயல்புகளை சுருக்கமாக விபரிக்குக.

(i) சோல்பரி அரசியல் யாப்பு

(ii) முதலாவது குடியரசு அரசியலமைப்பு

(iii) இரண்டாவது குடியரசு அரசியலமைப்பு

**4.** (i) இலங்கையின் அரசியலமைப்பின் 27 ஆம் உறுப்புரையில் காட்டப்பட்டுள்ளபடி, அரசாங்கக் கொள்கையின் நெறிமுறைக் கோட்பாடுகளின் (Directive principles of states policy) தாக்கம் என்னவென்பதை விபரிக்குக.

(ii) இலங்கையின் அரசியலமைப்பின் 28 ஆம் சட்ட விதியில் காட்டப்பட்டுள்ளபடி, அடிப்படைக் கடமைகள் பற்றி சிறுகுறிப்பொன்றை எழுதுக.

**5.** பின்வருவனவற்றுள் ஏதேனும் இரண்டினைப் பற்றி சிறுகுறிப்புகள் எழுதுக.

(i) அரசாங்க சேவை ஆணைக்குழு

(ii) ஓம்புட்ஸ்மன்

(iii) நீதிச்சேவை ஆணைக்குழு

[பக் 2 ஐப் பார்க்க.

## பகுதி II

**6.** சர்வதேச சட்டத்தின்கீழ் மனித உரிமைகள் என்ற எண்ணக்கரு பற்றிக் கலந்துரையாடுக.

**7.** சர்வதேச சட்டத்தின் முதன்மை மூலாதாரங்கள் எவை? அவற்றின் முக்கியத்துவத்திற்கு ஏற்ப ஒரு படிநிலை அமைப்பு (Hierarchy) இருக்கிறதா? சுருக்கமாக விபரிக்குக.

**8.** பொது சர்வதேச சட்டத்தின் முதற்படியான மற்றும் பிரதான சட்ட நபராக அரசுகளே கவனத்தில் எடுத்துக்கொள்ளப்பட்டுள்ளன. சர்வதேச சட்டத்தின் கீழ், சட்டநபர் "(Legal personality)" என்ற முற்றுமுழுதான தன்மையை அரசுகளே கொண்டுள்ளன என்பதை இரண்டு உதாரணங்களை எடுத்துக்காட்டி கலந்துரையாடுக.

**9.** 2010 ஆம் ஆண்டு மே மாதம் 31 ஆம் திகதி காஸாவிற்கு உதவிகளை எடுத்துச்சென்ற துருக்கிய கப்பலொன்றின் மீது இஸ்ரேல் தாக்குதல் நடத்தியது. இது தொடர்பாக, சர்வதேச நியமங்களுக்கமைய உடனடியானதும் பக்கச்சார்பற்றதும் வெளிப்படைத் தன்மை கொண்டதுமான விசாரணை ஒன்றை நடத்துமாறு, அவசர அமர்வொன்றில் ஐக்கிய நாடுகள் பாதுகாப்புச் சபை கேட்டுக் கொண்டது. அதற்குப் பதிலளித்த இஸ்ரேல், "இஸ்ரேல் என்பது ஒரு சனநாயகத் தேசம்; எந்தவித விசாரணையும் நடத்துவதற்கான உரிமையும் இயலுமையும் இஸ்ரேலுக்கு உண்டு. வேறெந்த சர்வதேச சபைகளும் விசாரணை நடத்த வேண்டியதில்லை" எனக் குறிப்பிட்டது.

இந்த விடயத்தைக் கவனத்திற் கொள்வதற்கு ஐக்கிய நாடுகள் பாதுகாப்புச் சபைக்கு அனுமதியுள்ளதா என்பதை விபரிக்குக.

**10.** பின்வருவனவற்றுள் ஏதேனும் இரண்டைப் பற்றி சிறுகுறிப்பு எழுதுக.

(i) ஒப்பந்தம் ஒன்றை முடிவுறுத்துதல் (Termination of a Treaty)

(ii) ஜுஸ் கோஜன்ஸ் (Jus Cogens)

(iii) ஆள்புல கடல் எல்லை (Territorial Waters)

(iv) இராஜ தந்திர சிறப்புரிமைகளும் விடுபாட்டு உரிமைகளும் (Diplomatic Privileges and Immunities)

* * *

සියලු ම හිමිකම් ඇවිරිණි]
முழுப் பதிப்புரிமையுடையது]
All Rights Reserved]

ශ්‍රී ලංකා විභාග දෙපාර්තමේන්තුව / இலங்கைப் பரீட்சைத் திணைக்களம் / Department of Examinations, Sri Lanka

**இலங்கை வெளிநாட்டு சேவையிலுள்ள உத்தியோகத்தர்களுக்கான 1 ஆவது மற்றும் 2 ஆவது வினைத்திறன்காண் தடைதாண்டல் பரீட்சை மற்றும் இரண்டாம் மொழிப் பரீட்சை - 2017 (2018)**

1st and 2nd Efficiency Bar Examination and Second Language Test for the Officers of the Sri Lanka Foreign Service – 2017(2018)

**(04)** இராஜதந்திர செயன்முறை
Diplomatic Practice

மூன்று மணித்தியாலங்கள்
Three hours

ஒவ்வொரு பகுதியிலிருந்தும் மூன்று வினாக்கள் வீதம் தெரிவு செய்து எல்லாமாக ஆறு வினாக்களுக்கு மட்டும் விடையளிக்குக.

## பகுதி I

**1.** (i) "அரசாங்கங்களுக்கிடையேயும் (states) நிரந்தர இராஜதந்திர தூதரங்களுக்கிடையேயுமான (Permanent Diplomatic Missions) இராஜதந்திர உறவுகள் பரஸ்பர இணக்க ஒப்புதலுடனேயே (Mutual Consent) கட்டியெழுப்பப்படுகின்றன."
- வியன்னா சமவாயம் 2 ம் உறுப்புரை:

உதாரணங்களுடன் அதனை மேலும் விளக்குக.

(ii) "இரு நாடுகளுக்கிடையே இராஜதந்திர உறவுகள், முற்றாக உடைந்துவிழாவிடினும், மிகவும் கீழான நிலைமைக்கு அல்லது கவலைக்கிடமான நிலைமைக்குத் தள்ளப்பட்ட சந்தர்ப்பங்கள் கடந்தகால வரலாற்றுக்கு அரிதானவை அல்ல."
உதாரணங்களுடன் இதனை விபரிக்குக.

**2.** (i) வியன்னா சமவாயத்தில் கூறப்பட்டுள்ளவாறு தூதரகங்களின் வகிபாகம் என்ன?

(ii) வெளிநாட்டு தூதரகங்கள் தமக்குரித்தான கடமைப் பொறுப்புகளின் எல்லைகளை மீறி செயற்பட்ட சந்தர்ப்பங்கள் காணக்கிடைக்கின்றனவா? ஆராய்க.

(iii) தனக்குரிய எல்லைகளை மீறி குறித்த தூதரகமொன்று செயற்படுமேயானால் ஏற்றுக்கொள்ளும் நாட்டினால் (Receiving state) எடுக்கக்கூடியதான நடவடிக்கை யாது?

**3.** கீழ்வரும் விடயங்களைப் பற்றி சிறுகுறிப்புகள் எழுதுக.

(i) தற்காலிக தூதுவர் (Charge dé Affairs)

(ii) தூதரக தலைவரை நியமிப்பது தொடர்பாக ஏற்றுக்கொள்ளும் நாட்டின் விருப்பத்தை வெளியிடுகிற ஆவணம் (Agrément)

(iii) உதவிகள் குறிப்பு ஆவணம் (Aide-Mémoire)

(iv) இராஜதந்தி அஞ்சல்பொதி (Diplomatic bag)

**4.** (i) தூதுவராலயமொன்றின் பணிக்குழுவினரின் எண்ணிக்கை குறித்து வியன்னா சமவாயத்தில் உள்ள ஏற்பாடுகள் எவை?

(ii) பணிக்குழுவினரின் எண்ணிக்கையைத் தீர்மானிக்கும் போது ஏற்றுக்கொள்ளும் நாட்டினதும் நியமிக்கும் நாட்டினதும் பொறுப்புகள் யாவை? விளக்குக.

**5.** (i) இராஜதந்திர அலுவலர் ஒருவர், மிகுந்த பொறுமை, சிறந்த ஆரோக்கியம், சிறந்த ஆளுமை, நுண்மதி, உடன் செயற்படல், சுயநலமின்மை, வரலாற்று ஆக்கங்கள் அடங்கிய நூல்களை படித்துப் பரிசீலிக்கும் ஆற்றல் ஆகியவற்றை உடையவராக, சுருக்கமாகக்கூறின், அவர் / அவள் கற்றவராக இருக்கவேண்டும்.

இராஜதந்திர அலுவலர் ஒருவர் மேற்கூறிய குணாம்சங்களால் நிறையப் பெற்றவராக இருக்க வேண்டியது ஏன்? விளக்குக.

(ii) இராஜதந்திர அலுவலர் ஒருவர் மேற்குறிப்பிட்ட குணாம்சங்களால் நிறையப் பெறாத ஒருவராக இருப்பின் அது, பொதுவாக நியமிக்கும் நாட்டின் மீதும், வெளிநாட்டுச் சேவை மீதும் ஏற்படுத்தும் பாதிப்புக்களை ஆராய்க.

[பக். 2 ஐப் பார்க்க

## பகுதி II

**6.** (i) இராஜதந்திர சேவையில் (Foreign service) சேர்கின்ற அலுவலர் ஒருவர், அந்நாட்டினது பிரஜையாக இருக்கவேண்டியது அத்தியாவசியமென்பது சாத்தோவின் இராஜதந்திர சேவை நடைமுறை நூலில் குறிப்பிடப்பட்டுள்ளது.

இவ்வாறு இருக்கவேண்டியது ஏன் அத்தியாவசியமாவது ஏனென்பதை விளக்குக.

(ii) இலங்கையினை உதாரணமாக கொண்டு, வெளிநாட்டு சேவை (Foreign service) மற்றும் ஏனைய சமாந்தர சேவைகளுக்கிடையே நிலவும் ஒற்றுமை மற்றும் வேற்றுமைகளை ஒப்பிட்டு விளக்குக.

**7.** கீழ்வருவனவற்றுள் **நான்கினைப்** பற்றி சிறுகுறிப்புகள் எழுதுக.

(i) முழுத் தத்துவ அதிகாரம் (Full Powers)

(ii) இராஜதந்திர அலுவலகமொன்றில் கொன்சுலர் விவகாரங்கள் (Consular Affair)

(iii) இராஜதந்திர விடுபாட்டுரிமை (Diplomatic Immunity)

(iv) புரிந்துணர்வு ஒப்பந்தம் (Memorandum of Understanding)

(v) கொன்சல் நாயகம் (Consul General)

**8.** (i) வெளிநாட்டு உறவுகளைப் பேணிநடத்துவது மற்றும் நாட்டின் வெளிவிவகாரங்கள் தொடர்பான பொறுப்புகளையும் வகிக்கின்ற வெளிநாட்டு விவகார அமைச்சின் கடமைப் பணிகளை விபரிக்குக.

(ii) சிறந்த வெளிநாட்டு உறவுகளைப் பேணிவதில் ஏற்றுக்கொள்ளும் நாட்டினுள் அமைந்துள்ள வெளிநாட்டு தூதரகங்களின் கடமைப் பணிகள் யாவை?

**9.** (i) கௌரவ தூதுவர் (Honorary Consul) ஒருவரை முன்மொழிதலில் இருந்து நியமனக் கடிதம் வழங்குவது வரையுள்ள அனைத்து படிமுறைகளையும் விபரிக்குக.

(ii) கௌரவ தூதுவர் ஒருவரது கடமைப் பணிகளை விளக்குக.

**10.** (i) 'சுதந்திர தொடர்பாடல் (Free Communication)' பற்றி வியன்னா சமவாயத்தில் உள்ள ஏற்பாடுகளை விபரிக்குக.

(ii) இராஜதந்திர அலுவலகமொன்றில் "சுதந்திர தொடர்பாடல் வசதிகளின் கீழ், இராஜதந்திர அஞ்சல் பொதியானது விசேட பணியொன்றை நிறைவேற்றுகின்றது."
ஆராய்க.

***

සියලු ම හිමිකම් ඇවිරිණි]
முழுப் பதிப்புரிமையுடையது]
All Rights Reserved]

ශ්‍රී ලංකා විභාග දෙපාර්තමේන්තුව / இலங்கைப் பரீட்சைத் திணைக்களம் / Department of Examinations, Sri Lanka

**இலங்கை வெளிநாட்டு சேவையிலுள்ள உத்தியோகத்தர்களுக்கான 1 ஆவது மற்றும் 2 ஆவது வினைத்திறன்காண் தடைதாண்டல் பரீட்சை மற்றும் இரண்டாம் மொழிப் பரீட்சை - 2017 (2018)**

1st and 2nd Efficiency Bar Examination and Second Language Test for the Officers of the Sri Lanka Foreign Service – 2017(2018)

**(05) சர்வதேச விவகாரங்கள்**
International Affairs

மூன்று மணித்தியாலங்கள்
Three hours

ஐந்து வினாக்களுக்கு மட்டும் விடையளிக்குக. எல்லா வினாக்களுக்கும் சமனான புள்ளிகள் வழங்கப்படும்.

**1.** "நவீன யுகத்தில் ஒரு நாட்டின் வெளிநாட்டுக் கொள்கையானது அந்நாட்டின் பொருளாதார நிலைமைகளில் நேரடியான தாக்கத்தை ஏற்படுத்துகின்றது."
கலந்துரையாடுக.

**2.** "தனித்து நிற்கும் யுகமானது முடிவு பெற்றுவிட்டது. நவீன அரசுகள், சர்வதேச சமூகத்தின் உறுப்பினர்களாக செயற்படுவதோடு அவ்வாறே நடந்தும் கொள்கின்றன."
இக்கூற்றினை கீழ்வரும் விடயங்களுக்கேற்ப விளக்குக.
(i) சர்வதேச உறவுகள் பற்றிய வரைவிலக்கணம் மற்றும் செயற்பரப்பு (Scope)
(ii) சர்வதேச உறவுகளின் மாற்றமுறும் இயல்புகள்

**3.** "இன்றைய உலகில் சர்வதேச உறவுகளை வரைவிலக்கணப்படுத்துகிற பல காரணிகள் உள்ளன".
அவற்றை உதாரணங்களுடன் விளக்குக.

**4.** பிரதம மந்திரி மன்மோகன்சிங் கீழும் மற்றும் பிரதம மந்திரி மோடியின் தற்போதைய ஆட்சிக் காலத்திலும் இலங்கை தொடர்பாக இந்தியா கடைபிடிக்கும் அணுகுமுறைகளைக் கலந்துரையாடுக.

**5.** சீனாவின் 'ஒரே பட்டி மற்றும் ஒரே பாதை (One Belt and One Road)' எனும் செயல்திட்டத்தை (Initiative) இலங்கையோடு தொடர்புறுத்தி கலந்துரையாடுக.

**6.** "அகதிகள் (Refugees) என்போர் பாதிப்புக்குள்ளானோரே அன்றி நெருக்கடியாளர், (Crisis) அல்லர்."
சிரியாவில் நிலவும் நிலைமைகளுக்கு விசேட அவதானம் செலுத்தி மத்திய கிழக்கு பிரச்சினையைத் தெளிவுபடுத்தி விளக்குக.

**7.** "பாதுகாப்புச் சபையின் மறுசீரமைப்பின் குறிக்கோளாவது, ஐக்கிய நாடுகளின் பட்டயத்தின் (UN Charter) வழியாக சர்வதேச அமைதி மற்றும் பாதுகாப்பினைப் பேணி வருவதற்காக அதனிடம் ஒப்படைக்கப்பட்டுள்ள பொறுப்பினை மிகவும் சிறப்பாக நிறைவேற்றும் திறனைப் பெற்றுக்கொடுத்தலாகும்."
நீங்கள் இக்கூற்றுடன் உடன்படுகின்றீர்களா? பாதுகாப்புச் சபையின் மறுசீரமைப்புக்களின் தற்போதைய நிலவரத்தை எடுத்துக்காட்டி இக்கூற்றினை விளக்குக.

**8.** பின்வரும் விடயங்களில் ஏதேனும் இரண்டினைப் பற்றி சிறுகுறிப்பு எழுதுக.
(i) இந்தியா மற்றும் பாகிஸ்தானுக்கிடையேயான உறவுகளின் சூழமைவில் சார்க் (SAARC) ஒழுங்கமைப்பு
(ii) BIMSTEC மற்றும் ரோஹிங்கயா நெருக்கடி
(iii) தென்சீன கடல் சூழமைவில் ஆசியான் (ASEAN) அமைப்பு
(iv) மனித உரிமைகள் கவுன்சில்

***

සියලු ම හිමිකම් ඇවිරිණි]
முழுப் பதிப்புரிமையுடையது]
*All Rights Reserved]*

ශ්‍රී ලංකා විභාග දෙපාර්තමේන්තුව / இலங்கைப் பரீட்சைத் திணைக்களம் / Department of Examinations, Sri Lanka

**இலங்கை வெளிநாட்டு சேவையிலுள்ள உத்தியோகத்தர்களுக்கான 1 ஆவது மற்றும் 2 ஆவது வினைத்திறன்காண் தடைதாண்டல் பரீட்சை மற்றும் இரண்டாம் மொழிப் பரீட்சை - 2017 (2018)**

1st and 2nd Efficiency Bar Examination and Second Language Test for the Officers of the Sri Lanka Foreign Service – 2017(2018)

**(06) இலங்கை வெளிநாட்டுச் சேவைப் பிரமாணக்குறிப்பு, வெளிநாட்டு அலுவல்கள் அமைச்சின் ஒழுங்கு விதிகள் மற்றும் கணினி அறிவு**
The Sri Lanka Foreign Service Minute, Foreign Ministry Regulations and Computer Literacy

மூன்று மணித்தியாலங்கள்
Three hours

ஒவ்வொரு பகுதியிலிருந்தும் இரண்டு வினாக்களைத் தெரிவு செய்து மொத்தம் ஆறு வினாக்களுக்கு மட்டும் விடையளிக்குக.

## பகுதி I

**1.** இலங்கை வெளிநாட்டுச் சேவையின் பிரமாணக் குறிப்புக்களை (2016) அடிப்படையாகக் கொண்டு பின்வரும் தலைப்புகளில் நான்கிற்கு சிறுகுறிப்புகள் எழுதுக.

(i) பிள்ளைகளின் கல்விசார் விமானப்பயணம் (Children Education Passage)
(ii) பதில் கடமைக் கொடுப்பனவு (Acting Allowance)
(iii) விசேட கடமைக் கொடுப்பனவு (Special Duty Allowance)
(iv) Chancery தலைவர் (Head of Chancery)
(v) உள்ளூர் இராசதந்திர பதவிநிலை (Local Diplomatic Rank)

**2.** இலங்கை இராசதந்திர சேவை உத்தியோகத்தர்களை வெளிநாட்டுக்கு நியமிக்கப்படும்போது, அவர்களுக்குப் பொருந்தக்கூடியதான இராசதந்திரப் பதவிநிலையின் படிநிலை அமைப்பு ஒழுங்கினை விபரிக்குக.

**3.** வெளிநாட்டு சேவையின் தரம் II இலிருந்து தரம் I இற்கு உத்தியோகத்தர்களை பதவி உயர்த்துவதற்காக தேவைப்படும் பட்டப்பின்படிப்பு தகைமைகள் தொடர்பான ஏற்பாடுகளை விளக்குக.

## பகுதி II

**4.** இலங்கை வெளிநாட்டு இராசதந்திர சேவை உத்தியோகத்தர்களுக்கு அவசர சந்தர்ப்ப விமானப்பயண அனுமதிப்பத்திரம் (Emergency Air Passage) வழங்குவதற்குரிய ஏற்பாடு எவ்வாறென்பதை விபரிக்குக.

**5.** போர் அல்லது அவசர சந்தர்ப்பங்களில் உத்தியோக எழுத்தாவணங்கள் தொடர்பாக எடுக்கப்படும் நடவடிக்கைகளைக் காட்டும் ஏற்பாட்டினை விளக்குக.

**6.** இலங்கை வெளிநாட்டு சேவை உத்தியோகத்தர்களுக்குரிய ஒழுக்கம் மற்றும் கட்டுப்பாட்டு நடவடிக்கைகளுடன் தொடர்பான ஏற்பாடுகளை விபரிக்குக.

## பகுதி III

**7.** கடதாசி, கடிதக்கோவை, எழுத்தாவணங்களைப் பயன்படுத்துவதற்குப் பதிலாக நவீன இலத்திரனியல் தொழில்நுட்ப முறையைப் பயன்படுத்தும் கடதாசி இல்லாத (Paperless) அலுவலக சூழலொன்றை உருவாக்குவதற்கான ஆலோசனை ஒன்றை முன்வைக்குக.

**8.** சர்வதேச தொலைபேசி வசதிகள் (IDD) மற்றும் தொலைநகல் (Fax) செய்தி முறைகளுக்குப் பதிலாக இலத்திரனியல் அஞ்சல், ஸ்கைப் (Skype), வைபர் (Viber), போன்ற இலத்திரனியல் தொடர்பாடல் முறைப் பயன்பாடுகளை அறிமுகப்படுத்த முடியுமாவென்பதைக் கலந்துரையாடுக.

**9.** அமைச்சு மற்றும் இலங்கை தூதரகங்களுக்கான சைபர் பாதுகாப்புக் கொள்கையின் கீழ் (Cyber Security) கணினி மற்றும் தரவுகளைப் பாதுகாப்பதற்குப் பொருத்தமான வேலைத்திட்டமொன்றை முன்மொழிக.

***

සියලු ම හිමිකම් ඇවිරිණි/
முழுப் பதிப்புரிமையுடையது/
All Rights Reserved]

ශ්‍රී ලංකා විභාග දෙපාර්තමේන්තුව / இலங்கைப் பரீட்சைத் திணைக்களம் / Department of Examinations, Sri Lanka

இலங்கை வெளிநாட்டு சேவையிலுள்ள உத்தியோகத்தர்களுக்கான 1 ஆவது மற்றும் 2 ஆவது வினைத்திறன்காண் தடைதாண்டல் பரீட்சை மற்றும் இரண்டாம் மொழிப் பரீட்சை - 2017 (2018)

1st and 2nd Efficiency Bar Examination and Second Language Test for the Officers of the Sri Lanka Foreign Service – 2017(2018)

மூன்று மணித்தியாலங்கள்
Three hours

(21) இலங்கையில் பொருளாதாரமும் மற்றும் சமூக அபிவிருத்தியும்
Economic and Social Development in Sri Lanka

**ஐந்து** வினாக்களுக்கு மட்டும் விடை எழுதுக. எல்லா வினாக்களுக்கும் சமமான புள்ளிகள் வழங்கப்படும்.

**1.** இலங்கையின் பிரதம மந்திரியினால் 2015 இல் முன்வைக்கப்பட்ட பொருளாதாரக் கொள்கைகள் பிரகடனத்துக்கேற்ப மூலோபாய தொலைநோக்கு (Strategic vision) ஒன்று தாபிக்கப்பட்டுள்ளது. இத்திட்டத்தில் முக்கிய கவனஞ் செலுத்தப்பட்ட நான்கு பிரிவுகளைக் குறிப்பிட்டு அவற்றை விமர்சன ரீதியாக மதிப்பிடுக.

**2.** 'இலங்கையில் ஏழை மக்களின் முன்னேற்றத்திற்காக குறைந்த வருமான மட்டத்தை உயர்த்துவதற்கும் பொருளாதார விருத்தி பெறுவதற்கும் தொடர்ந்தும் வழங்கப்படும் மரபுரீதியான உதவிகள் உதவுகின்றன.'

இவ்வாறு வழங்கப்படும் முக்கிய **ஐந்து** வகையான உதவிகளையும் அவற்றின் அனுகூலங்கள் பிரதிகூலங்கள் என்பனவற்றையும் விளக்குக.

**3.** இலங்கையின் கிராமிய மக்களின் வாழ்க்கைத் தரத்தை மேம்படுத்துவதனை இலக்காகக் கொண்டு, மரபுரீதியான விவசாயத்துறையில் ஏற்படுத்தக்கூடிய நவீன மாற்றங்கள் தொடர்பாக நீங்கள் முன்மொழியக்கூடிய உபாயங்கள் (Strategies) **ஐந்தினை** விளக்குக.

**4.** 60 வயதுக்கும் அதற்கும் மேற்பட்டோரினதும் தொகை 2041 ஆம் ஆண்டில் மொத்த சனத்தொகையில் 25% ஆகும் என்று எதிர்வு கூறப்பட்டுள்ளது. இது தொடர்பில் எதிர்காலத்தில் இலங்கையின் கொள்கை வகுப்பாளர் எதிர்நோக்கும் சமூக பொருளாதார சவால்கள் **நான்கினை** விளக்குக.

**5.** எமது நாட்டில் பெண் ஊழியப் படையின் பங்கேற்பு (FLFP) ஒப்பீட்டளவில் குறைவானதாகும். பெண் ஊழியப்படையின் பங்கேற்பினை மேலும் அதிகரிப்பதற்கு நீங்கள் முன்வைக்கும் ஆலோசனைகளை விளக்குக.

**6.** இலங்கையை உயர் மனித அபிவிருத்திச் சுட்டி கொண்ட நாடாக வகைப்படுத்தப்படுவதில் தாக்கம் செலுத்தும் பிரதான காரணிகளை விவரிப்பதுடன் எதிர்காலத்தில் மேலும் சிறந்த மனித அபிவிருத்தியை ஏற்படுத்துவதற்காக நாம் கவனஞ் செலுத்த வேண்டிய சவால்கள் யாவை என்பதையும் விவரிக்குக.

**7.** "கல்வியினூடாக தொடர்ச்சியான சமூக ஒருங்கிணைப்பை உறுதிப்படுத்துவதற்கு, இணைந்த பாடசாலைகள் ஒரு உத்தியாகும்." நீங்கள் இக்கருத்தினை ஏற்றுக்கொள்கிறீர்களா? இதனூடாக ஏற்படும் அனுகூலங்கள் சவால்கள் என்பனவற்றைக் குறிப்பிட்டு உமது விடையை விளக்குக.

**8.** பின்வருவனவற்றுள் எவையேனும் **நான்கினுக்கு** சிறுகுறிப்புகள் எழுதுக.

(i) வருமானம் ஈட்டும் போது வரி செலுத்துதல் (Pay as you earn)

(ii) ஏழைகளை வலுவூட்டல்

(iii) வறுமையில் நிதியின்மைப் பாங்கு (How poverty is being non - monetary)

(iv) இலங்கையில் திண்மக் கழிவு முகாமைத்துவம்

(v) நாட்டில் வசிக்காத இலங்கையர்களின் பொருளாதாரப் பங்களிப்பு

(vi) திறந்த அரச பங்கேற்பு (Open state participation)

***

සියලු ම හිමිකම් ඇවිරිණි/
முழுப் பதிப்புரிமையுடையது]
*All Rights Reserved]*

ශ්‍රී ලංකා විභාග දෙපාර්තමේන්තුව / இலங்கைப் பரீட்சைத் திணைக்களம் / Department of Examinations, Sri Lanka

# இலங்கை வெளிநாட்டு சேவையிலுள்ள உத்தியோகத்தர்களுக்கான 1 ஆவது மற்றும் 2 ஆவது வினைத்திறன்காண் தடைதாண்டல் பரீட்சை மற்றும் இரண்டாம் மொழிப் பரீட்சை - 2017 (2018)

# 1st and 2nd Efficiency Bar Examination and Second Language Test for the Officers of the Sri Lanka Foreign Service – 2017(2018)

## (22) நிருவாகம்
## Administration

மூன்று மணித்தியாலங்கள்
Three hours

பகுதி 'அ' இல் இரு வினாக்களுக்கும் பகுதி 'ஆ' இலிருந்து நான்கு வினாக்களுக்கும் விடை எழுதுக.

### பகுதி 'அ'
### அலுவலக முறைமைகளும் ஒழுங்கமைப்பு முறைகளும்

**1.** அரச அலுவலகங்களில் நடைமுறையிலுள்ள வேலைநடைமுறைகள் மூன்றின் பெயர்களைக் குறிப்பிட்டு அலுவலக நடைமுறைகளைப் பின்பற்றுவதால் கிட்டும் நன்மைகளை விளக்குக. *(20 புள்ளிகள்)*

**2.** சரியான கோப்பு முறையொன்றின் அடிப்படை இயல்புகளை விளக்கி அத்தகையதொரு கோப்புமுறையினைப் பின்பற்றுவதன் முக்கியத்துவத்தையும் விளக்குக. *(20 புள்ளிகள்)*

**3.** 'படிவங்கள் (forms)' என்பதனால் கருதப்படுவது யாது என்பதை விளக்கி, அலுவலக நடவடிக்கைகள் சம்பந்தமாக படிவங்களைப் பயன்படுத்தப்படுவதன் முக்கியத்துவத்தை விளக்குக. *(20 புள்ளிகள்)*

**4.** தகவல்தொழினுட்பத்தினூடாக (கணனிகளைப் பயன்படுத்தி) செயற்படுத்த முடியுமான, ஆனால் இன்னும் மரபு சார்ந்த முறையில் அலுவலக முறை இயங்குகின்ற நான்கு சந்தர்ப்பங்களை பெயரிட்டு இதன் மூலம் அந்த அலுவலக முறை வினைத்திறன் மிக்கதாக மாறும் விதத்தை விளக்குக. *(20 புள்ளிகள்)*

### பகுதி 'ஆ'
### தாபன விதிக்கோவை (தொகுதி I மற்றும் தொகுதி II)

**5.** எத்தகைய தவறுகள் தொடர்பாக அரசாங்க அலுவலர் ஒருவரின் சேவைமூப்பினை கீழிறக்க முடியும்? *(15 புள்ளிகள்)*

**6.** இடமாற்ற சபையின் பரிந்துரையின்றி இடமாற்றங்களைச் செய்யக்கூடிய சந்தர்ப்பங்களை விளக்குக. *(15 புள்ளிகள்)*

**7.** ஒழுக்காற்று ஆணையொன்றை (disciplinary order) பிறப்பிக்கும் போது ஒழுக்காற்று அதிகாரியின் (disciplinary authority) பொறுப்புகளை விளக்குக. *(15 புள்ளிகள்)*

**8.** அரச சேவைக்கு வெளியே சேவையாற்றுவதற்கு அலுவலர் ஒருவரை விடுவிக்கக்கூடிய சந்தர்ப்பங்கள் எவை எனக் குறிப்பிடுக. *(15 புள்ளிகள்)*

**9.** உத்தியோகபூர்வ தொடர்பாடல் தொடர்பாக பின்பற்றப்பட வேண்டிய நியதிகள் எவையென்பதை தாபனக்கோவை XXVIII அத்தியாயத்தில் குறிப்பிடப்பட்டுள்ள ஒழுங்கு விதிக்கமைய விளக்குக. *(15 புள்ளிகள்)*

**10.** அரசாங்க சேவைக்கு ஆட்சேர்ப்பு திட்டமொன்றைத் தயாரிக்கும்போது உள்ளடக்கவேண்டிய பிரதான அம்சங்களை விபரங்களோடு விளக்குக. *(15 புள்ளிகள்)*

* * *

සියලු ම හිමිකම් ඇවිරිණි]
முழுப் பதிப்புரிமையுடையது]
All Rights Reserved]

| வினா எண் | பெற்ற புள்ளிகள் |
|---|---|
| 1 | |
| 2 | |
| 3 | |
| 4 | |
| 5 | |
| 6 | |
| மொத்தம் | |
| விடைத்தாளைப் பரீட்சித்தவர் | |
| புள்ளிகளைப் பரீட்சித்தவர் | |

ශ්‍රී ලංකා විභාග දෙපාර්තමේන්තුව / இலங்கைப் பரீட்சைத் திணைக்களம் / Department of Examinations, Sri Lanka

# இலங்கை வெளிநாட்டு சேவையிலுள்ள உத்தியோகத்தர்களுக்கான 1 ஆவது மற்றும் 2 ஆவது வினைத்திறன்காண் தடைதாண்டல் பரீட்சை மற்றும் இரண்டாம் மொழிப் பரீட்சை - 2017 (2018)

# 1st and 2nd Efficiency Bar Examination and Second Language Test for the Officers of the Sri Lanka Foreign Service - 2017 (2018)

## (31) தமிழ் (எழுத்து மூலம்)
## Tamil (Written)

இரண்டு மணித்தியாலங்கள்
Two hours

● எல்லா வினாக்களுக்கும் இத்தாளிலேயே விடை எழுதுக. சுட்டெண்: ..............................

**1.** பின்வரும் வினாக்கள் ஒவ்வொன்றுக்கும் பொருத்தமான விடைகளைத் தரப்பட்ட நான்கு தெரிவுகளிலிருந்தும் தெரிந்து அதன் இலக்கத்தை வினாவின் எதிரேயுள்ள அடைப்புக்குள் தெளிவாக எழுதுக.

(i) துதித்தல் என்பதன் ஒத்த கருத்துச் சொல்,
(1) மறித்தல் (2) ஆதரித்தல் (3) பரவல் (4) பூரித்தல் (.........)

(ii) வளமை என்பதன் ஒத்த கருத்துச் சொல்,
(1) வளம் (2) வாடிக்கை (3) பழக்கம் (4) வழக்குரை (.........)

(iii) தந்தை என்பதன் எதிர்ப்பாற் சொல்,
(1) எந்தை (2) நுந்தை (3) தாரம் (4) தாய் (.........)

(iv) பின்னவன் என்பதன் எதிர்ப்பாற் சொல்,
(1) முன்னவன் (2) அன்னவன் (3) சகோதரி (4) பின்னவள் (.........)

(v) ஒருமை என்பதன் எதிர்ப்பொருட் சொல்,
(1) பன்மை (2) இருமை (3) அருமை (4) வேற்றுமை (.........)

(vi) கைதூக்கல் என்பதன் எதிர்ப்பொருட் சொல்,
(1) கைகொடுத்தல் (2) கால் தூக்கல் (3) கைபோடல் (4) கைவிடுதல் (.........)

(vii) கிள்ளுக்கீரை என்னும் மரபுத்தொடர் உணர்த்தும் பொருள்,
(1) பசுமையானது (2) அற்பமானது (3) மலிவானது (4) வேர்கொள்ளாதது (.........)

(viii) பதம்பார்த்தல் என்னும் மரபுத்தொடர் உணர்த்தும் பொருள்,
(1) சோதித்தல் (2) பிழைகாணல் (3) துன்புறுத்தல் (4) வடிகட்டல் (.........)

(ix) "தாரகை நடுவண் தண்மதிபோல" என்ற உவமைத்தொடர் உணர்த்துவது,
(1) தனிமை (2) சினம் (3) மகிழ்ச்சி (4) சிறப்பு (.........)

(x) "ஆராய்ந்து செயலாற்ற வேண்டும்" என்பதை உணர்த்தும் பழமொழி
(1) அடாது செய்பவர் படாது படுவர். (2) ஆழமறியாது காலைவிடாதே.
(3) எறும்பூரக் கற்குழியும். (4) அழையா விருந்துக்கு நுழையாதே. (.........)

[பக் 2 ஐப் பார்க்க.

(xi) எழுத்துப்பிழை இடம்பெறாத சொல்,

(1) ஏனி (2) ஒம்பது (3) துறப்பு (4) தாழ்வாரம் (.........)

(xii) எழுத்துப்பிழை இடம்பெற்றுள்ள சொல்,

(1) எளிமை (2) குழிர்மை (3) செழுமை (4) ஏழ்மை (.........)

(xiii) "ஏதோ நல்ல செய்தி கொண்டு வருபவன்போல அவன் நடை இருந்தது" - இவ்வாக்கியத்தில் "வருபவன்" என்பது,

(1) எதிர்கால வினைமுற்று (2) படர்க்கைப் பெயர்
(3) வினையாலணையும் பெயர் (4) ஆக்கப்பெயர் (.........)

(xiv) "கமலா தன் கணவனுடன் வெளிநாடு போனதைப்பற்றி இதுவரை எனக்கு யாரும் சொல்லவில்லை".
- இவ்வாக்கியத்தின் எழுவாய்,

(1) கமலா (2) யாரும் (3) எனக்கு (4) வெளிநாடு (.........)

(xv) பின்வருவனவற்றுள் அகரவரிசை ஒழுங்கில் **அமையாத** சொற்றொகுதி,

(1) அகலம், அகாலம், அகிலம், அங்காடி, அங்கு, அச்சு
(2) பக்கம், பகல், பகுதி, பாகம், பாதம்
(3) இசை, இணை, இரை, இலை, இழை
(4) ஆண்டு, ஆண்டி, ஆங்கு, ஆக்கு, ஆப்பு (.........)

(xvi) பின்வருவனவற்றுள் பொருள் தொடர்பு **அற்ற** சொற்றொகுதி,

(1) மின்னல், இடி, மழை, புயல், வெள்ளம் (2) அவியல், வறுவல், பொரியல், சுண்டல், கடையல்
(3) உறைப்பு, வெதுப்பு, கடுப்பு, சதுப்பு, இனிப்பு (4) மொக்கு, மொட்டு, மலர், அலர், வீ (.........)

(xvii) முதல் எழுத்து என்பது,

(1) சொல்லுக்கு முதலில் வரும் எழுத்து (2) உயிர் எழுத்து
(3) மெய் எழுத்து (4) உயிரெழுத்தும் மெய்யெழுத்தும் (.........)

(xviii) "சி.வை. தாமோதரம்பிள்ளை அவர்கள் தமிழுக்குப் பெரும் தொண்டாற்றியுள்ளார்"
- இவ்வாக்கியத்தில் வரும் "அவர்கள்" என்பது,

(1) மரியாதை ஒருமைப்பெயர் (2) பலர்பால் பெயர்
(3) படர்க்கைப் பெயர் (4) பன்மைப்பெயர் (.........)

(xix) இயல்பு புணர்ச்சி இடம்பெற்றுள்ள சொல்,

(1) தேங்காய் (2) பாலாடை (3) பலாவிலை (4) தலைக்கவசம் (.........)

(xx) பெயராகவும் வினையாகவும் வழங்கும் சொல்,

(1) ஓடு (2) காடு (3) தேடு (4) தோடு (.........)

*(1 × 20 = 20 புள்ளிகள்)*

[பக் 3 ஐப் பார்க்க.

67

● பின்வரும் வாக்கியங்களில் உள்ள **எழுத்துப் பிழைகளைத் திருத்தி** அவ்வாக்கியங்களை மீண்டும் எழுதுக.

**2.** (i) விறகுக்காக மரங்களைத் தரிக்கலாமா?

............................................................................................................................

(ii) விஞ்ஞானத்துறையில் புதிய புதிய ஆராச்சிகள் நிகழ்ந்தவண்ணம் உள்ளன.

............................................................................................................................

(iii) எந்த நிலையிலும் ஒருவர் தண்நம்பிக்கையை இழந்துவிடலாகாது.

............................................................................................................................

(iv) இழைப்பாறிய அரசாங்க அதிபர் வருகிறார்.

............................................................................................................................

(v) மலைநாட்டில் சோனாவாரியாக மளை கொட்டியது.

............................................................................................................................

*(10 புள்ளிகள்)*

● பின்வரும் வாக்கியங்களில் உள்ள **இலக்கணப் பிழைகளைத் திருத்தி** அவ்வாக்கியங்களை மீண்டும் எழுதுக.

**3.** (i) அந்த மரங்கள் பார்வைக்குச் சிறியதாயிருக்கும்.

............................................................................................................................

(ii) நாகனும் நாயும் ஓடின.

............................................................................................................................

(iii) என் தோட்டத்தில் ஒரு மாமரமொன்று வைத்திருக்கிறேன்.

............................................................................................................................

(iv) அங்கு நடைபெறும் அபிவிருத்தித் திட்டங்கள் தொடர்பாக வடமாகாண ஆளுனருடன் கலந்துரையாடப்பட்டன.

............................................................................................................................

(v) எப்படியும் முன்னேறவேண்டுமென்ற இலட்சியமுடன் உழைத்துவந்தான்.

............................................................................................................................

*(10 புள்ளிகள்)*

● பின்வரும் வினாக்கள் ஒவ்வொன்றிலும் தரப்பட்டுள்ள இரண்டு வாக்கியங்களையும் இணைத்து ஒரு வாக்கியமாக எழுதுக.

**4.** (i) இன்று மழை விடாது பெய்தது. அதன் காரணமாக எனது மகன் பாடசாலைக்குப் போகவில்லை.

............................................................................................................................

(ii) அந்த மாணவன் கவனமாகப் படிக்கவில்லை. அவன் பரீட்சையில் சித்தி எய்தவில்லை.

............................................................................................................................

(iii) நாம் எதனையும் தீர ஆலோசனை செய்யவேண்டும். அதன் பின்னரே முடிவுக்கு வரவேண்டும்.

............................................................................................................................

/பக் 4 ஐப் பார்க்க.

(iv) ஓர் மனிதன் கையடக்கத்தொலைபேசியில் பேசிக்கொண்டு தெருவிற் சென்றான். அப்போது அவனுக்கு விபத்து ஏற்பட்டது.

.....................................................................................................................................

(v) பக்கத்து வீட்டுக்காரனுடைய மாடு என் தோட்டத்துள் நுழைந்து பயிர்களை மேய்ந்தது. அந்த மாட்டை நான் பிடித்துக் கட்டிவைத்தேன்.

.....................................................................................................................................

*(10 புள்ளிகள்)*

5. பின்வரும் பகுதியைத் தமிழில் மொழிபெயர்த்து எழுதுக.

Conflict may not be pleasant, but it does not have to be bad. Quite the contrary. It can be the means for strengthening relationships, building respect, winning new friends and establishing credibility. In fact, conflict can be a significant means by which God does his work of maturing grace in all of us.

Before we engage in any serious contact with the people of another culture or racial group, we need to realize that they may hold different cultural values and use different rules to respond to conflict situations. What does this mean?

First, it means that the majority of the people in the world value relationships above most other values. So building relationships of trust takes top priority. Nothing of significance is likely to happen if there is little trust. Most Anglo Westerners try to build trust by showing themselves competent in completing tasks, whereas others tend to build trust by spending time, including work time, together.

Second, most people do not separate the person from the person's words or acts. To criticize a person's idea is to criticize or demean the person. So statements like "Don't take this personally, but..." are likely to cause hurt feelings and alienation for people outside of an Anglo Western culture.

.....................................................................................................................................

.....................................................................................................................................

.....................................................................................................................................

.....................................................................................................................................

.....................................................................................................................................

.....................................................................................................................................

.....................................................................................................................................

.....................................................................................................................................

.....................................................................................................................................

.....................................................................................................................................

.....................................................................................................................................

.....................................................................................................................................

.....................................................................................................................................

.....................................................................................................................................

.....................................................................................................................................

[பக் 5 ஐப் பார்க்க.

*(25 புள்ளிகள்)*

**6.** மேல்வரும் பகுதியை ஆங்கிலத்தில் மொழிபெயர்த்து எழுதுக.

நாம் பருகவும் குளிக்கவும் உணவு சமைக்கவும் விவசாயம் செய்யவும் நீர் இன்றியமையாதது. தொழிற்சாலைகளிலிருந்து வெளியேறும் கழிவுநீர் ஆறுகளிலும் குளங்களிலும் கலப்பதால் நீர் மாசுறுகிறது. அந்நீரைப் பருகும் மனிதர்களும் விலங்கினங்களும் நோய்வாய்ப்பட அது ஏதுவாகின்றது.

தூய்மையான காற்று இன்றி நாம் உயிர் வாழ முடியாது. உயிர் வாழ்க்கைக்கு இன்றியமையாத காற்று தற்காலத்தில் மாசுபட்டு வருவதைக் காண்கின்றோம். தொழிற்சாலைகள் பல நச்சு வாயுக்களைக் காற்றினுள் செலுத்துகின்றன. மோட்டார் வாகனங்கள் கக்கும் புகையும் காற்றை மாசுபடுகிறது. அனல்மின் நிலையங்களும் அணுமின் உலைகளும் தொழிற்சாலைகளும் வெளியேற்றும் புகையோடு தூசு, சாம்பல் கதிர்வீச்சு முதலியனவும் காற்றில் கலந்து அதனைப் பாழாக்குகின்றன. மாசுபட்ட காற்றைச் சுவாசிப்பதால் மக்களின் உடல்நலம் குன்றுகிறது. நச்சுக்காற்றால் தாவரங்களும் விலங்குகளும் உயிரினங்களும் வளர்ச்சி குன்றுகின்றன.

சமையலறைக் கழிவுகள், உடைந்த கண்ணாடித் துண்டுகள், குப்பை கூழங்கள் என்பனவும் வெளியில் வீசியெறியப்படுகின்றன. மனிதக் கழிவுகள், விலங்குக் கழிவுகள், பறவை எச்சங்கள் என்பனவும் வளவிற்குள்ளும் பொதுவிடங்களிலும் போடப்படுகின்றன. அவையாவும் சுற்றுப்புறச் சூழலை மாசுபடுத்துகின்றன. அதனால் நோய்க்கிருமிகள் பெருகுகின்றன; நோய்கள் பரவுகின்றன; மக்கள் அல்லல் உறுகின்றனர்.

[பக் 6 ஐப் பார்க்க.

*(25 புள்ளிகள்)*

***